# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.

| | |
|---|---|
| Calendar Case No: | CC.40/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி.முருகாயி |
| Father's Name/Husband Name: | திரு.கணேசன் |
| Village : | தேவையூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 60 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.07.2025

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317 ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகின்றேன். ப.சா.2 கணேசன் எனது கணவர். ப.சா.3 சத்தியராஜ் எனது மகன். ப.சா.4 அமலா எனது மருமகள். ஆஜர் இல்லாத எதிரிகள் அனைவரையும் தெரியும். சம்பவத்திற்கு முன்பாக எதிரி மணி என்பவருக்கும் இடையே நிலப்பிரச்சனை இருந்து வந்தது. எதிரி மணி எனது கணவரின் தம்பி ஆவார். கடந்த 14.08.2022 ம் தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் நான் எங்கள் ஊரில் உள்ள மூக்கன் வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்ப எனது வீட்டிற்கு வந்து கொண்டு இருந்த போது என் வீட்டின் அருகே எதிரி மணி குடிப்போதையில் தேவடியா, ஊர ஓத்தவலே என்று தகாத வார்த்தைகளால் பேசி செருப்பால் அடித்து கீழே தள்ளிவிட்டார். எதிரி சுதா கட்டையால் என் தலையில் அடித்தார். எதிரி சுதாகர் என் உயிர் நிலையில் எட்டி உதைத்தார்.

எதிரி சுரேஷ் வயிற்றில் எட்டி உதைத்து கன்னத்தில் அறைந்தார். எதிரி சேட்டு என்னை கையால் முதுகில் அடித்தார். எதிரிகள் சுமதி, கவியரசு, சேட்டு ஆகியோர் என் முதுகிலும், காலிலும், உடம்பிலும் மாறி மாறி அடித்தனர். அதை தடுக்க வந்த என் மகன் சத்தியராஜ்யை எதிரிகள் சுதாகர், சுரேஷ் ஆகியோர் கழுத்தை பிடித்து நெறித்தனர். எதிரிகள் சுதாகர், சுரேஷ், சேட்டு, கவியரசன் மற்றும் சுமதி ஆகியோர் உடல் மற்றும் கை, கால்களில் அடித்தனர். சுதாகர் மற்றும் அனைத்து எதிரிகளும் எனது கணவரை கைகளால மூச்சி விடாமுடியாத அளவிற்கு அடித்தனர். என் மருமகளுக்கு உடலில் நகக்கீரல்கள் ஏற்பட்டது. எதிரிகள் சுதாகர், கவியரசன் மற்றும் சுமதி ஆகியோர் சட்டையை பிடித்து இழுத்ததில் நகக்கீரல்கள் ஏற்பட்டது. மேலும் என் மருமகளின் முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளினர். காயம்பட்டவுடன் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். பின்னர் 16.08.2022ம் தேதி போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்த போது சம்பவம் குறித்து வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிற**து. நான் மருத்துவமனயில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னுடன் எனது கணவரும் ஒரு வாரம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அதன் பின்பு மேல்சிகிச்சைக்காக பிரியம் மருத்துவமனைக்கு சென்று சேர்ந்தேன். பிரியம் மருத்துவமனையில் 6 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இன்று வரை உயிர்நிலையில் வலி உள்ளது. நான் அளித்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யமுன்வரவில்லை. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை** : இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.40/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு.சத்தியராஜ் |
| Father's Name/Husband Name: | திரு.கணேசன் |
| Village : | தேவையூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 37 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.07.2025

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிாிவு 317 ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சென்ரிங் வேலை செய்து வருகின்றேன். அ.சா.1 முருகாயி எனது அம்மா. ப.சா.2 கணேசன் எனது அப்பா. ப.சா.4 அமலா எனது மனைவி. ஆஜர் இல்லாத எதிரிகள் அனைவரையும் தெரியும். சம்பவத்திற்கு முன்பாக எங்களுக்கும் எதிரி மணி என்பவருக்கும் இடையே நிலப்பிரச்சனை, பாதை பிரச்சனை இருந்து வந்தது. எதிரி மணி எனது சித்தப்பா ஆவார். கடந்த 14.08.2022 ம் தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் நான் எங்கள் ஊரில் உள்ள மூக்கன் வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்ப எனது வீட்டிற்கு வந்து கொண்டு இருந்த போது என் வீட்டின் முன்பாக எதிரி மணி குடிப்போதையில் தேவடியா, ஊர மேய்ந்தவலே என்று தகாத வார்த்தைகளால் பேசி செருப்பால் அடித்து கீழே தள்ளிவிட்டார். எதிரி சுதா கட்டையால் என் அம்மாவின்

தலையில் அடித்தார். எதிரி சுதாகர் என் அம்மாவின் பிறப்பு உறுப்பில் எட்டி உதைத்தார். எதிரி சுரேஷ் என் அம்மாவின் வயிற்றில் எட்டி உதைத்து ஓங்கி கன்னத்தில் அறைந்தார். எதிரி சேட்டு என் முதுகில் அடித்தார். எதிரிகள் சுமதி என் கழுத்தை பிடித்து நெறித்துவிட்டார். எதிரி சுரேஷ் என்அப்பாவை கட்டையால் இடது பக்க விலாவில் அடித்தார். எதிரி கவியரசி அசிங்க, அசிங்கமாக திட்டிக்கொண்டு சென்று என் அப்பாவை கையால் அடித்தார். எதிரி சுதாகர் என் மனைவியின் ஜாக்கெட்டை பிடித்து இழுத்து கையால் அடித்துவிட்டார். எதிரி சுதாகர் என் அம்மாவை முடியை பிடித்து இழுத்து காலால் எட்டி உதைத்து கீழே தள்ளிவிட்டார். எதிரிகள் அனைவரும் கத்தி மற்றும் கட்டையை வைத்துக்கொண்டு இதற்கு மேல் எங்களிடம் வம்பு வைத்துக்கொண்டால் கொன்று புதைத்துவிடுவதாக மிரட்டினார். காயம்பட்ட நாங்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று நாங்களும் எனது மனைவியும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. என் அப்பாவும், என் அம்மாவும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். என் அம்மா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் சம்பவத்தை குறித்து விசாரித்தனர். சம்பவம் குறித்து எனது அம்மா வாக்குமூலம் அளித்தார். என் அளித்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யமுன்வரவில்லை. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.